## சுருக்கம்

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வருவாய் நிர்வாகம் – அனைத்து ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள், இன்னபிறவை மற்றும் வருவாய் கிராமங்களின் பெயர்களில் உள்ள சாதிப் பெயர்களை நீக்குதல்/மறுபெயரிடுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(2)) துறை**

அரசாணை (நிலை) எண்.313

நாள் 06.10.2025
திருவள்ளுவராண்டு 2056
விசுவாவசு வருடம், புரட்டாசி 20
படிக்கப்பட்டவை:-

(1) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க. எண்2489/2025/டிபி, நாள்:29.05.2025.

(2) கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அவர்களின் கடிதம் எண்.10519652/P.R.II (2)/2025-2, நாள் 04.06.2025.

(3) கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாக ஆணையரகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் அவர்களின் கடிதம் ந.க.பணி 6(1)/299569/2025, நாள் 20.07.2025.

*******

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

**– உலகப்பொதுமறை**

**பிறப்பினால் அனைவரும் சமம், செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்**

**– முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்**

**ஆணை:-**

தமிழ்நாடு அரசு, சாதி, மதம், பாலினம், செல்வம், அதிகாரம் போன்ற எந்தவொரு காரணத்தாலும் வேறுபாடு இல்லாத, சம வாய்ப்புகள் கொண்ட ஒரு நியாயமான மற்றும் முன்னேற்றமிக்க சமத்துவ சமூக அமைப்பை (A fair and Progressive Egalitarian Society) நோக்கி பல்வேறு திட்டங்கள், பணிகள், கொள்கை முன்னெடுப்புகளை மேற்கொண்டுவருகிறது.

2. தமிழ்நாடு அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக, சமூகத்தில் சமத்துவத்தை நிலைநிறுத்த பல மாற்றங்களை முன்னெடுத்த சமூக சீர்திருத்தவாதி தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், தெருக்களிலிருந்து சாதிப் பெயர்களை நீக்க 1978 ஆம் ஆண்டு, அக்டோபர் 3ஆம் நாளன்று அரசு ஆணை வெளியிட்டது. இவ்வாணையில், பாகுபாட்டைத் தவிர்த்து சமத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் உரிய தீர்மானங்களை நிறைவேற்றி சாதிப் பெயர்களை நீக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

3. அரசு, அனைத்து தரப்பு மக்களும் மதிப்போடும், சமமாகவும் நடத்தப்படும் போது மட்டுமே உண்மையான சமத்துவ சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற அடிப்படையில் மேற்கொண்டுவரும் எண்ணற்ற முன்னோடி முயற்சிகளின் ஒரு பகுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 29.04.2025 அன்று பின்வரும் முக்கிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

> **ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமைக்கான குறியீடாகவும் வசை சொல்லாக மாறியிருப்பதால் காலனி என்ற சொல் அரசு ஆவணங்களில் இருந்தும், பொது பழக்கத்திலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.**

4. அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில், குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள், இன்னபிற போன்றவற்றிலுள்ள சாதிப் பெயர்களை நீக்குதல்/மறுபெயரிடுதல் தொடர்பாக 01.04.2025 மற்றும் 19.05.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலும், சமூகத்தில் குறிப்பிட்ட பிரிவினரை இழிவுப்படுத்தும் வகையில் குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பிற பொது உட்கட்டமைப்புகள் போன்றவற்றிலுள்ள சாதிப் பெயர்களை நீக்குதல்/மறுபெயரிடுதல் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோரிடமிருந்து மேலே படிக்கப்பட்ட மூன்று கடிதங்களில், மாதிரி வழிகாட்டு நெறிமுறைகள் பெறப்பட்டுள்ளன.

5. அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மேற்குறிப்பிடப்பட்ட மாதிரி வழிகாட்டு நெறிமுறைகளை கவனமான பரிசீலனைக்குப் பின்னர் ஏற்று, இவ்வாணையின் இணைப்புகளில் உள்ளவாறு

குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பிற பொது உட்கட்டமைப்புகள் போன்றவற்றில் உள்ள சாதிப் பெயர்களை நீக்குதல் அல்லது மறுபெயரிடுதல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுகிறது.

6. இவ்வாணையை, இணைப்பில் நிர்ணயிக்கப் பட்டுள்ளவாறான காலவரம்பிற்குள் செயல்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர், பெருநகரசென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

// ஆளுநரின் ஆணைப்படி //

நா.முருகானந்தம்
அரசு தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாக ஆணையரகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சென்னை-05.
பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்,
சென்னை-03.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28.
ஆணையர்,
அனைத்து மாநகராட்சிகள். (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர)
ஆணையர்,
அனைத்து நகராட்சிகள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
செயல் அலுவலர், அனைத்து பேரூராட்சிகள். (பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)
ஆணையர், வளர்ச்சி ஊரக ஊராட்சி மற்றும் துறை, சென்னை-15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 09.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 09.
அரசு தலைமை செயலாளரின் சிறப்புத் தனிச் செயலாளர், சென்னை-09.
கூடுதல் அரசு தலைமைச்செயலாளரின் தனிச்செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-09.

கூடுதல் அரசு தலைமைச் செயலாளரின் தனிச்செயலாளர்,
வருவாய் மற்றும் மேலாண்மைத் பேரிடர் துறை, சென்னை–09.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–09.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்
அனைத்து அலுவலர்கள் மற்றும் பிரிவுகள்.
**இருப்புக் கோப்பு/உதிரி**

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

06/10/2025

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு- I

**குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பிற பொது உட்கட்டமைப்புகளில் சாதிப் பெயர்களை நீக்குதல் அல்லது மறுபெயரிடுவது தொடர்பாக ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்.**

(அ) உள்ளாட்சி அமைப்புகளின் குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள், சந்தைகள் போன்ற சொத்துக்கள் மற்றும் நீர்நிலைகள் போன்ற பொது உட்கட்டமைப்புகளின் பெயர்கள் ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது பிரிவைச் சார்ந்த மக்களையும் அவர்களது உணர்வுகளையும் இழிவுபடுத்துவதாக அல்லது பாகுபாடு காட்டும் வகையில் அமைந்துள்ளதா என்பதையும் குறித்து மதிப்பிடும் வகையில் பெயர்கள் தொடர்பாக விரிவான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) இப்பணியை கிராம ஊராட்சிகளைப் பொறுத்தளவில், துணை வட்டார அலுவலர்களுடன் இணைந்து, வட்டார வளர்ச்சி அலுவலர்களால் (ஊராட்சி) மேற்கொள்ளப்பட வேண்டும்.

(இ) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை இப்பணியை பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் நகராட்சி / மாநகராட்சி ஆணையர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ) அத்தகைய குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், பொதுவான சொத்துக்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்ட பிறகு, அத்தகைய பெயர்களை பயன்படுத்துவது குறித்து பொதுமக்களிடையே நிலவும் சூழ்நிலையை, குறிப்பாக, உள்ளூர் மக்களின் கருத்து / பதில்களைப் பொறுத்து மதிப்பிட வேண்டும். மேற்குறிப்பிட்ட பொருண்மை தொடர்பான பெயர்களை தொடர்வதில் களத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றால், பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவை ஒரு பிரிவினரை இழிவுபடுத்தும் விதமாகவும், உள்ளூர் மக்களும் மாற்றத்தைக் கோரினால், அந்தப் பெயர்கள் பொதுவான பெயர்களாக மாற்றப்பட வேண்டும்.

(உ) சில பெயர்கள்/பிரிவுகள் அவசியம் மாற்றப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆதிதிராவிடர் காலனி, ஹரிஜன் குடியிருப்பு, வண்ணான்குளம், பறையர் தெரு, சக்கிலியர் சாலை போன்றவை தவிர்க்கப்பட வேண்டிய பெயர்கள். இதுபோன்ற சூழ்நிலைகளில், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, பொது/சாதிச்சார்பற்ற தன்மை கொண்ட புதிய பெயருடன் பெயரை மாற்றலாம். எடுத்துக்காட்டான பெயர்கள் இணைப்பு – Iஅ–வில் கொடுக்கப்பட்டுள்ளன. சில நேர்வுகளில், பொதுமக்கள் ஏற்கெனவே உள்ள பெயர்களை மாற்ற விரும்பவில்லை எனில், அத்தகைய பெயர்களை மாற்ற வேண்டிய அவசியமில்லை. பிரச்சினையின் உணர்திறனைக் கருத்தில் கொண்டு, இப்பொருண்மை மிகுந்த கவனத்துடன் கையாளப்பட வேண்டும்.

(ஊ) மேலும், கள நிலைமை மற்றும் களத்தில் உள்ள உண்மைத்தன்மையின் அடிப்படையில் இந்தப் பணி மிகவும் கவனமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். உள்ளூர் சமூகத்தின் உணர்வுகள் மதிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும், எனினும் அதே வேளையில், சாதி சார்ந்த அறிகுறிகள் தவிர்க்கப்படுதல் உகந்ததாக இருக்கும். இது போன்ற பெயர் நீக்கம் / மாற்றங்களுக்கு கிராமப் பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரை கிராம சபையிலும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை பொறுத்தவரை ஏரியா சபையிலும் பெரும்பான்மையானோரின் ஒப்புதல் அவசியமாகும். மேலும், தற்போதுள்ள பெயர்களைத் தொடர விரும்பினால், அதற்கான காரணங்களை பரிசீலித்த பின்னர், அவ்வாறு தொடருவது அனுமதிக்கப்படலாம்.

(எ) ஊரகப் பகுதிகளை பொறுத்தளவில், உள்ளூர் உண்மைத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்களால் தயாரிக்கப்பட்ட பட்டியல்கள் உதவி இயக்குநர் நிலையிலான மண்டல அலுவலரால் முழுமையாகச் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

(ஏ) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை பொறுத்தளவில், உள்ளூர் உண்மைத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு செயல் அலுவலர்கள் / ஆணையர்களால் தயாரிக்கப்பட்ட பட்டியல்கள், தொடர்புடைய பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் / நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரால் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

(ஐ) அவ்வாறு சரிபார்க்கப்பட்ட குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், பொதுவான சொத்துக்களின் பெயர் மாற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவரால் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும். இதன் மீது ஆட்சேபணைகள்/கருத்துக்கள் ஏதுமிருப்பின், அவற்றை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாள்முதல் 21 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக அளிக்க காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும்.

(ஒ) அறிவிக்கை வெளியிடப்பட்ட 21 நாட்களுக்குள் ஆட்சேபணைகள்/கருத்துக்கள் ஏதும் பெறப்படின், அவற்றை முறையாக பரிசீலித்து, ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் மாற்றங்கள் குறித்த தனித்தனியான ஒருங்கிணைந்த செயற்குறிப்புகள் மாவட்ட ஆட்சித்தலைவரால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் / நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக. பின்வரும் படிவத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

| வ.எண் | மாவட்டம் | உள்ளாட்சி அமைப்புகள் | சாதிப்பெயர்களை கொண்ட குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள், இன்னபிற | | பெயர் மாற்றுவதற்கான முடிவு | ஆம் எனில், முன்மொழியப்பட்ட புதிய பெயரைக் குறிப்பிடவும் | புதிய பெயர் தேர்வு செய்ப்பட்டதற்கான காரணம் / குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வகைப்பாடு (குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள், இன்னபிற) | தற்போதுள்ள பெயர் | ஆம்/இல்லை | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | | | | |
| | | | | | | | |

(ஓ) அரசளவில் பெறப்படும் செயற்குறிப்புகள் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 158 / 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் பிரிவு 129–இன் கீழ் வரையறுக்கப்பட்ட வகைமுறைகளைப் பின்பற்றி பெயர்மாற்றம் குறித்த முடிவுகள் இறுதி செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட வேண்டும்.

(ஔ) இதனைத் தொடர்ந்து, நேர்வுகளுக்கேற்ப, அரசின் அனுமதி பெற்று, மாற்றம் செய்யப்பட்ட பெயர்களுக்கு, ஊராட்சிகள்/நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புதல் வழங்கி நடைமுறைப்படுத்த வேண்டும். பெயர் மாற்றங்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழியாக மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுதல் வேண்டும். அவ்வாறான அறிவிக்கையின்படி அனைத்து ஆவணங்களிலும் தக்க மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒவ்வொரு துறையிடமிருந்தும் அறிக்கையினை பெற்று உறுதி செய்யப்பட வேண்டும்.

(அஅ) குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், நீர்நிலைகள் போன்ற பொது உட்கட்டமைப்புகள் ஆகியவற்றின் பெயர் ஆட்சேபகரமானது என முடிவு செய்யப்பட்டு, தக்கவாறு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், பொதுமக்களின் நன்மைக்கென பின்வரும் நடைமுறைகளை பின்பற்றப்படுதல் வேண்டும்:–

(i) சாதி சான்றிதழ்களில் உரியவாறு திருத்தங்கள் மேற்கொள்ள தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

(ii) ஆதார் அட்டையில் திருத்தங்கள் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம்.

(iii) குடும்ப அட்டையில் திருத்தங்கள் மேற்கொள்ள ELCOT மூலமாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

(iv) நில உடைமைப் பதிவுகள்/ பத்திரப் பதிவுகள்/வில்லங்க சான்று உள்ளிட்ட ஆவணங்களில் உள்ள பழைய குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், நீர்நிலைகள் போன்ற பொது உட்கட்டமைப்புகள் குறித்து, மாற்றம் செய்யப்பட்ட பெயரினை இணையத்தளத்தில் உரியவாறு மாற்றம் செய்து, (*) குறியீடு செய்யப்பட்ட வருவாய் கிராமத்தின் பழைய பெயரினை Foot Note ஆக குறிப்பிடும் வகையில் மென்பொருளில் மாற்றம் செய்திடலாம். நில ஆவணங்கள் / பதிவுத்துறைகளிலும் குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், நீர்நிலைகள் போன்ற பொது உட்கட்டமைப்புகள் ஆகியவற்றின் பழைய பெயர் இடம் பெறாத வகையில் Mapping செய்யப்படலாம்.

இப்பணிகளை செயல்படுத்துவதற்கான தற்காலிக அட்டவணை பின்வருமாறு:

| செயல்பாடு | காலவரம்பு |
|---|---|
| சாதிப் பெயர்களைக் கொண்ட குடியிருப்புகள், சாலைகள். தெருக்கள் பொது சொத்துக்கள் போன்றவற்றின் பெயர்களை மதிப்பீடு செய்தல் | 14.10.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |
| பெயர் மாற்றம் தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடல் நடத்துதல் / குடியிருப்பு, சாலைகள், தெரு, பொது சொத்துக்கள் போன்றவற்றின் பெயர்களை மாற்றுவதற்கான விண்ணப்பத்தைப் பெறுதல் | 17,10,2025 – ஆம் நாளுக்கு முன்னர் |
| மாவட்ட ஆட்சித்தலைவரால் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட்டு, பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகள்/ கருத்துகள் பெறுதல் | 24.10.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |
| துறைத் தலைவர்கள் வழியாக அரசுக்கு உரிய செயற்குறிப்புகள் அனுப்பப்படுதல் | 14.11.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |
| அரசின் முடிவினை சம்பந்தப்பட்ட மன்றக் கூட்டத்தில் பொருள் வைத்து, மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடுதல் | 19.11.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |

நா.முருகானந்தம்
அரசு தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

08/10/2025

பிரிவு அலுவலர்

இணைப்பு– I அ

எடுத்துக்காட்டான பெயர் பட்டியல்

| வ.எண் | பெயர் |
|---|---|
| | **குளம் மற்றும் நீர்நிலைகள்** |
| 1 | ரோஜா |
| 2 | மல்லி |
| 3 | செம்பருத்தி |
| 4 | சூரியகாந்தி |
| 5 | சாமந்தி |
| 6 | தாழம்பூ |
| 7 | காந்தள் |
| 8 | கனகாம்பரம் |
| 9 | கொன்றை |
| 10 | மகிழம்பூ |
| 11 | முல்லை |
| 12 | செண்பகம் |
| 13 | குவளை |
| 14 | குறிஞ்சி |
| 15 | செவ்வந்தி |
| | **தெருக்கள் மற்றும் சாலைகள்** |
| 1 | திருவள்ளுவர் |
| 2 | ஔவையார் |
| 3 | கபிலர் |
| 4 | சீத்தலைச் சாத்தனார் |
| 5 | நக்கீரர் |
| 6 | பிசிராந்தையார் |
| 7 | கம்பர் |
| 8 | அகத்தியர் |
| 9 | வீரமாமுனிவர் |
| 10 | பாரதியார் |
| 11 | பாரதிதாசன் |
| 12 | மகாத்மா காந்தி |
| 13 | தந்தை பெரியார் |
| 14 | பேரறிஞர் அண்ணா |
| 15 | காமராசர் |
| 16 | கலைஞர் |

நா.முருகானந்தம்
அரசு தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

**இணைப்பு – II**

(அ) **வருவாய் கிராமங்களின் சாதிப் பெயர்களை நீக்குதல் அல்லது மறுபெயரிடுவது தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் பெறப்பட்ட மனுக்கள் சேகரம் செய்யப்படுதல் வேண்டும்.**

(ஆ) இந்நேர்வுகளின் கூர் உணர்வுத் தன்மையைக் கருத்திற் கொண்டு, அடையாளம் கண்டறியப்பட்ட ஆட்சேபகர வருவாய் கிராமத்தின் பெயர் மற்றும் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்று பெயர் குறித்து தொடர்புடைய பகுதியில், கிராமசபை / ஏரியா சபையின் சிறப்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

(இ) ஆட்சேபணை உள்ள வருவாய் கிராமங்களின் பெயர்களை மாற்றம் செய்தல் குறித்து மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட வருவாய் அலுவலர், தொடர்புடைய வருவாய் கோட்ட அலுவலர், அந்தந்த பகுதிகளை (ஊராட்சி / வட்டாரம்/மாவட்டம்) சார்ந்த மக்கள் பிரதிநிதிகள், ஆதிதிராவிடர் நல அலுவலர், உதவி இயக்குநர் (ஊராட்சி), வருவாய் வட்டாட்சியர்/செயல் வட்டார வளர்ச்சி அலுவலர், பேரூராட்சி செயல் அலுவலர்/நகராட்சி ஆணையர்/மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கொண்ட குழு ஒன்றினை அமைத்து பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய கிராமங்களின் பட்டியலை பரிசீலித்து, இறுதி செய்திடல் வேண்டும். இப்பட்டியலுக்கு கலந்துகொண்டவர்கள் தங்கள் கையொப்பம் இடுதல் வேண்டும்.

(ஈ) அவ்வாறு இறுதி செய்யப்பட்ட வருவாய் கிராமங்களின் பெயர் மாற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவரால் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும். இதன் மீது ஆட்சேபணைகள்/கருத்துக்கள் ஏதுமிருப்பின், அவற்றை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாள்முதல் 21 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக அளிக்க காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும்.

(உ) அறிவிக்கை வெளியிடப்பட்ட 21 நாட்களுக்குள் ஆட்சேபணைகள்/கருத்துக்கள் ஏதும் பெறப்படின், அவற்றை முறையாக பரிசீலித்து, அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவரால் இறுதி அறிவிக்கை, மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்.

(ஊ) பெயர் மாற்றங்கள் குறித்த அறிவிக்கைகள் வெளியிடப்பட்ட மாவட்ட அரசிதழின் நகலினை மாவட்டத்திலுள்ள அனைத்து துறை அலுவலகங்களுக்கும், அனைத்துத் துறை தலைமை அலுவலகங்களுக்கும், தலைமைச் செயலக அனைத்து துறைகளுக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(எ) பெயர் திருத்த ஆணையின்படி, அனைத்து ஆவணங்களிலும் தக்க மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறித்து ஒவ்வொரு துறையிடமிருந்தும் அறிக்கையினை பெற்று உறுதி செய்திட வேண்டும்.

(ஏ) கிராமத்தின் பெயர் ஆட்சேபகரமானது என முடிவு செய்யப்பட்டு, தக்கவாறு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், பொதுமக்களின் நன்மைக்கென பின்வரும் நடைமுறைகளை பின்பற்றப்படுதல் வேண்டும்:

(i) சாதி சான்றிதழ்களில் உரியவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

(ii) ஆதார் அட்டையில் திருத்தங்கள் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம்.

(iii) குடும்ப அட்டையில் திருத்தங்கள் மேற்கொள்ள ELCOT மூலமாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

(v) நில உடைமைப் பதிவுகள்/ பத்திரப் பதிவுகள்/வில்லங்க சான்று உள்ளிட்ட ஆவணங்களில் உள்ள பழைய வருவாய் கிராமங்களை குறித்து, மாற்றம் செய்யப்பட்ட பெயரினை இணையத்தளத்தில் உரியவாறு மாற்றம் செய்து, (*) குறியீடு செய்யப்பட்ட வருவாய் கிராமத்தின் பழைய பெயரினை Foot Note ஆக குறிப்பிடும் வகையில் மென்பொருளில் மாற்றம் செய்திடலாம். நில ஆவணங்கள்/ பதிவுத்துறைகளிலும் வருவாய் கிராமத்தின் பழைய பெயர் இடம் பெறாத வகையில் Mapping செய்யப்படலாம்.

இப்பணிகளை செயல்படுத்துவதற்கான தற்காலிக அட்டவணை பின்வருமாறு:

| செயல்பாடு | காலவரம்பு |
|---|---|
| சாதிப் பெயர்களைக் கொண்ட குடியிருப்புகள், சாலைகள். தெருக்கள் பொது சொத்துக்கள் போன்றவற்றின் பெயர்களை மதிப்பீடு செய்தல் | 14.10.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |
| பெயர் மாற்றம் தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரை யாடல் நடத்துதல்/ குடியிருப்பு, சாலைகள், தெரு, பொது சொத்துக்கள் போன்றவற்றின் பெயர்களை மாற்றுவதற்கான விண்ணப்பத்தைப் பெறுதல் | 17.10.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |
| மாவட்ட அரசிதழில் பெயர் மாற்றம் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுதல் | 24.10.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |
| பெயர் மாற்றம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கிராம சபை/பகுதி சபையில் அறிவிக்கப்படுதல் | 19.11.2025 – ஆம் நாளுக்கு முன்னர் |

நா.முருகானந்தம்
அரசு தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்